**செய்தி வெளியீடு எண் : 2076** **நாள் : 29.11.2024**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மருத்துவத்துறையில் இந்த ஒரு வாரத்தில் மட்டும் 428 மருத்துவர்களுக்கு பதவி உயர்வு 2553 மருத்துவர் பணியிடங்களுக்கு தேர்வு 05.01.2025 அன்று முன்கூட்டியே நடத்தி மிக விரைவில் பணிநியமன ஆணைகள் வழங்கப்படும் 2140 செவிலியர்களுக்கு 02.12.2024 அன்று பணிநியமன ஆணைகள் வழங்கப்படும் – மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தகவல்**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் இன்று (29.11.2024) சென்னை, தலைமை செயலகத்தில் மருத்துவத்துறை பணியிடங்களை நிரப்புவது தொடர்பாக செய்தியாளர்கள் சந்திப்பு கூட்டத்தில் கலந்து கொண்டார். பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

மக்கள் நல்வாழ்வுத்துறையில் காலியாக இருக்கின்ற மருத்துவர் பணியிடங்களை நிரப்புவதற்குரிய நடவடிக்கைகள் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 1021 மருத்துவர் பணியிடங்கள் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னாள் நிரப்பப்பட்டது. அந்தவகையில் நடப்பாண்டில் எதிர்வரும் 2026 வரையிலான காலிபணியிடங்கள் (Arraising Vacanty) ஒட்டுமொத்தமாக 2553 என்கின்ற வகையில் கண்டறியப்பட்டுள்ளது. இந்த 2553 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான பணி தொடர்ந்து நடைபெற்று வந்தது. அந்தவகையில் 2553 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதற்கு 23,971 பேர் விண்ணப்பித்திருந்தார்கள். மேலும் இந்த விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு தேர்வுகள் நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.இந்த 23,971 பேருக்கு தேர்வு நடத்துவது என்பது பெரிய நிறுவனங்களால் மட்டுமே முடியும் என்கின்ற வகையில், ஒரு பெரிய நிறுவனத்தோடு பேசி, தேர்வு தேதி அறிவிக்கப்பட்டது. 27.01.2025 அன்று தேர்வு நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த தேர்வு தேதியை முன்கூட்டியே நடத்தி பணியிடங்களை விரைந்து நிரப்புவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்திய நிலையில், அதற்கேற்றவாறு அந்நிறுவனத்துடன் பேசி 05.01.2025 என்று தேர்வு தேதி மாற்றப்பட்டிருக்கிறது. அதற்குரிய அறிவிப்பாணை (Notification) இன்று வெளியிடப்பட்டிருக்கிறது. இத்தேர்வு முடிந்தவுடன் விரைந்து தேர்ச்சி பெற்றவர்களை தேர்வு செய்வதற்கு கூடுதல் பணியாளர்களை மருத்துவப்பணியாளர் தேர்வாணையத்திற்கு (MRB) தந்து உடனடியாக பணி நியமனம் செய்தவற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.**

***பதவி உயர்வு***

இந்த துறையில் பணிநியமனம் செய்வதற்கு பல்வேறு வழக்குகள் நிலுவையில் இருந்த நிலையில் மருத்துவர்களுக்கான பதவி உயர்வு என்பது நீண்டகாலமாக தடைபட்டிருந்தது. நீதிமன்றங்களில் உள்ள வழக்குகள் ஒவ்வொன்றாக தீர்வு காணப்பட்டு தற்போது பல்வேறு துறைகளில் பதவி உயர்வுகள் கடந்த ஒரு வார காலமாக நிரப்பப்பட்டு வருகிறது, அந்தவகையில் மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநரக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அரசு மருத்துவக்கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர் பணியிடங்களிலிருந்து இணைப் பேராசிரியர்கள் என்கின்ற வகையில் பதவி உயர்வு 296 பேருக்கு வழங்கப்பட்டு அதற்கான பணி ஆணைகள் தரப்பட்டிருக்கிறது. அதேபோல் 2024–25 ஆம் ஆண்டிற்கான 40 துறைகளில் இணைப் பேராசிரியர் பணியிலிருந்து பேராசிரியராக 110 பேருக்கு பதவி உயர்வு ஆணைகள் ஒன்றன்பின் ஒன்றாக வழக்கு மன்றத்தின் தீர்ப்புகளின் அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கிறது. இதோடுமட்டுமல்லாமல் மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநரகத்தின் இணை இயக்குநர் பொறுப்புகளில் இருந்தவர்களுக்கு கூடுதல் இயக்குநர்களாக 4 பேருக்கு வழங்கப்பட்டு அவர்கள் பணியில் இணைந்திருக்கிறார்கள். மேலும் முதன்மை குடிமை

மருத்துவர் பணியிடங்களிலிருந்து இணை இயக்குநர்களாக 18 பேர் பதவி உயர்வு பெற்றிருக்கிறார்கள். ஆக இந்த ஒரு வாரம் காலத்தில் மட்டும் மருத்துவத்துறையில் 428 மருத்துவப் பேராசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல் செவிலியர்களைப் பொறுத்தவரை நீண்ட நாட்களாக தொகுப்பூதியத்திலிருந்து பணியாற்றியவர்கள் 1200 பேர், இவர்கள் அனைவரும் இன்றைக்கு நிரந்தர செவிலியர்களாக பதவி உயர்வு வழங்கும் பணி நடைபெற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, 1200 தொகுப்பூதிய செவிலியர்களை நிரந்தர செவிலியர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். இந்த 1200 பேருக்கும் கலந்தாய்வு நடத்தி, கலந்தாய்வு மூலம் அவரவர் விரும்பும் இடங்களுக்கே பணி ஆணைகள் என்கின்ற வகையில் கலந்தாய்வு கடந்த 14.11.2024 மற்றும் 15.11.2024 ஆகிய இரண்டு நாட்களுக்கு DMS வளாகத்தில் கலந்தாய்வு நடத்தப்பட்டு, 1200 செவிலியர்களுக்கான பணி ஆணைகள் தயார் நிலையில் இருக்கின்றது. அதேபோல் கோவிட் காலங்களில் பணியாற்றியவர்களுக்கு தொகுப்பூதிய அடிப்படையில் பணிநியமனம் செய்ய 940 பேருக்கு பணிநியமனம் ஆணைகள் வழங்கிட கலந்தாய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்று நடைபெறும் கலந்தாய்வின் மூலம் 940 பேருக்கு தொகுப்பூதிய அடிப்படையில் பணிநியமனம் விரைவில் வழங்கப்படவிருக்கிறது. தொகுப்பூதிய அடிப்படையில் சில ஆண்டுகள் பணிபுரிந்த பிறகு நிரந்தர செவிலியராக மாற்றப்படுவார்கள். **எனவே தொகுப்பூதிய பணியிடத்திலிருந்து நிரந்தர செவிலியர்களாக 1200 பேரும், கோவிட் காலங்களில் பணிபுரிந்த ஒப்பந்த செவிலியர்கள் என 940 பேர் என 2140 பேருக்கு வருகின்ற 02.12.2024 அன்று மாலை 05.00 மணிக்கு சென்னை கிண்டி தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக வளாகத்தில் இருக்கின்ற ஆடிட்டோரியத்தில் பணி ஆணைகள் தரப்படும் நிகழ்ச்சி நடைபெறவிருக்கிறது.**

***<u>புதிய பணியிடங்கள்</u>***

இந்த துறையைப் பொறுத்தவரை வெளிப்படைத்தன்மையோபடு பணியிடமாறுதல்கள் என்பது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே 37000த்திற்கும் மேற்பட்ட மருத்துவர்கள், செவிலியர்கள் மருத்துவம் சார்ந்த களப்பணியாளர்கள் என மூன்றரை ஆண்டுகள் கலந்தாய்வு மூலம் இந்த துறை வரலாற்றில் எப்போதும் இல்லாத வகையில் வெளிப்படைத்தன்மையோடு கலந்தாய்வு நடத்தப்பட்டு ஆணைகள் பெற்றிருக்கிறார்கள். அந்தவகையில் 27.11.2024 மற்றும் 28.11.2024 ஆகிய இரண்டு நாட்களில் தொகுப்பூதிய செவிலியர்களுக்கு பணியிடமாறுதல்களுக்கான கலந்தாய்வு நடத்தி 1196 தொகுப்பூதிய செவிலியர்களுக்கு இன்று பணியிடமாறுதல் ஆணைகள் வழங்கப்படவிருக்கிறது. இதோடுமட்டுமல்லாமல் இந்த துறையில் இன்னமும் காலிப்பணியிடங்கள் நிரப்ப வேண்டி, சுகாதார ஆய்வாளர் பணியிடம் 1066 பேருக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டு மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் (MRB) மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. இதில் 38 வழக்குகள் தனித்தனியே நடைபெற்ற காரணத்தினால் மாண்பமை உயர்நீதிமன்றத்தின் அறிவுறுத்தல்களை ஏற்று, இந்த 1066 பேருக்கும் தேர்வுகள் நடத்தி அவர்களை தேர்வு செய்ய வேண்டும் என்கின்ற வகையில் அரசாணைகள் பெறுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மிக விரைவில் அவர்களுக்கான தேர்வு தேதி அறிவிக்கப்பட்டு வெற்றிபெற்றவர்களுக்கு பணி ஆணைகள் வழங்கப்படும். மேலும் கிராம சுகாதார செவிலியர்கள் 2250 பேருக்கு அனைத்து பணிகளும் முடிந்த நிலையில் 13 வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்றது. மேலும் உச்சநீதிமன்றத்தில் Advocate on Records அவர்களிடத்தில் Early petition இன்று உச்சநீதிமன்றத்தில் துறையின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அந்த வழக்கு அனேகமாக டிசம்பரில் வரும் என்று எதிர்பார்க்கிறோம். அது வந்தவுடன் உச்சநீதிமன்றத்தின் இந்த 13 வழக்குகளுக்கும் தீர்வு காணப்பட்டு, அவர்களுக்கும் இந்த துறையில் 2250 கிராம சுகாதார செவிலியர்களை இணைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. தற்போதுகூட மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் (MRB)யின் சார்பில் ஒரு 47 பிசியோதெரபிஸ்ட் என்று சொல்லப்படுகிற இயன்முறை மருத்துவர்களுக்கு தேர்வு நடைபெற தேதி எல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த 47 இடங்களுக்கு 8,772 பேர் விண்ணப்பித்திருக்கிறார்கள்.

இந்த 8,772ல் தகுதிபடைத்த 47 பேர் MRBயின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு பணி ஆணைகள் தரப்படவிருக்கிறது. எனவே **இந்த நிலையில் அரசின் சார்பில் கடந்த ஒரு வாரத்தில் 428 மருத்துவர்களுக்கு பதவி உயர்வு, 2553 மருத்துவர் காலிப்பணியிடங்களுக்கு தேதி முன்கூட்டியே அறிவித்திருப்பது, 2140 செவிலியர்களுக்கு வருகிற 2ஆம் தேதி பணி ஆணைகள் தருவது என்று பல்வேறு பணிகள் விரைந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.**

**<u>மருத்துவர்கள் பற்றாக்குறை தொடர்பாக பிரபல நாளேட்டில் வந்த செய்திக்கு</u>**

மருத்துவர்கள் சங்கம் பொறுத்தவரை அவர்கள் பத்திரிக்கைகளில் மருத்துவர்கள் பற்றாக்குறை உள்ளது என்று கூறியதை மறுத்து இருக்கிறார்கள். சம்மந்தப்பட்ட மருத்துவர்கள் சங்கத் தலைவர் மரு.செந்தில் அவர்களிடம் இது குறித்து பேசினோம், அவரும் மறுப்பு தெரிவித்து இது தொடர்பாக அறிக்கை விடப்போவதாக தெரிவித்து உள்ளார்கள். மேலும் இத்துறையைப் பொருத்தவரை ஆரம்பத்திலிருந்தே காலிப்பணியிடங்களை நிரப்புவதில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெரிய அளவில் முனைப்பு காட்டுகிறார்கள். இதில் உங்களுக்கு தெரியும், 1021 மருத்துவ பணியிடங்கள் நிரப்பும்போது நிறைய வழக்குகள். அவற்றை ஒவ்வொன்றாக தீர்வு காணப்பட்டு இந்த பணி நியமனங்கள் வழங்கப்படுகிறது.

வரும் ஜனவரியில் இந்த 2553 மருத்துவர்கள் பணிக்கு இணைந்து விட்டால் முதுநிலை படிப்பு (Post Graduate) முடித்தவர்கள் மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநரக கட்டுப்பாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கும், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநரக கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அரசு மருத்துவக்கல்லூரிக்கும் சென்று விடுவார்கள். அதனால் காலிப்பணியிடங்கள் எவ்வளவு இருக்கிறது என்று வெளிப்படையா அறிவித்து இருக்கிறோம். 2026 இல் ஏற்படவுள்ள காலிப்பணியிடங்கள் (Arraising Vacancy) சேர்த்து அதை நிரப்புவதற்குரிய பணிகள் நடைபெற்று வருகிறது.

***<u>மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியிடங்களை நிரப்பிட வழக்கு தொடர்பான கேள்விக்கு</u>***

வழக்கு மன்றங்களுக்கு செல்வதை யாரும் தடுக்க முடியாது அவர்களுக்கு உரிமை இருக்கிறது. சுகாதார ஆய்வாளர்கள் பொறுத்தவரை 2 வருடம் அவர்கள் படித்து இருக்க வேண்டும். அதுவும் தமிழ்நாட்டில் படித்து இருக்க வேண்டும் என்பது ஒரு பொதுவான நியதி. ஆனால் பாண்டிச்சேரியில் படித்தவர்கள், கர்நாடாகாவில் படித்தவர்கள் இதில் நாங்களும் தானே சுகாதார ஆய்வாளர் படிப்பு படித்து இருக்கிறோம், எங்களுக்கும் கொடுங்கள் என்று அவர்களும் கேட்கிறார்கள். அது 1 வருடம் படித்தவர்கள் நாங்களும் சுகாதார ஆய்வாளர் படிப்பு படித்து இருக்கிறோம் என்று அவர்களும் ஒரு வழக்கு போட்டிருக்கிறார்கள். இது போலதான் மொத்தம் 38 வழக்குகள் இருக்கிறது. கடைசியா சென்னை உயர்நீதிமன்றம் சொல்லியிருப்பது இவர்களுக்கு ஒரு தேர்வு நடத்தி கொடுக்க வேண்டும் என்றும், இப்பொழுது தேர்வு எப்படி நடத்தி கொடுப்பதற்கான ஒரு வரைமுறை (Guide Line) தயாரிக்கின்ற பணி நடக்கிறது. மேலும் கிராம சுகாதார செவிலியர்கள் பணியிடங்களைப் பொறுத்தவரை அவர்களும் இதுபோல படித்தவர்களுக்கு தரவேண்டும், எத்தனை வருடம் படித்தவர்களுக்கு தர வேண்டும், இப்போது படித்த அனைவருமே அரசு பணிக்கு வரவேண்டும் என்று நினைக்கிறார்கள். இதில் பெரும்பகுதியாக நீதிமன்றத்திற்கு செல்வது மிக எளிது. படித்து எதை படித்தாலுமே இதன் வழியாக படிக்கும்போது எங்கு படித்தாலுமே நான் அரசு பணிக்குதான் செல்ல வேண்டும் என்ற மனநிலை அதிகரித்து விட்டது. வாய்ப்பு இருக்கிறவர்களுக்கும், திறமை இருக்கிறவர்களுக்கும் தகுதி இருப்பவர்களுக்கும் பணி கிடைத்துவிட்டது, மற்றவர்கள் தனியார் பணிக்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதெல்லாம் இல்லை படித்த அத்தனை பேருமே அரசுப்பணிக்கு வரவேண்டும் என்பதால்தான் இந்த சிக்கல் ஏற்படுகிறது.

***<u>பருவமழை – மருத்துவ முகாம்</u>***

வடகிழக்கு பருவமழை பொறுத்தவரை நவம்பர் 14ந் தேதி மற்றும் 15ந் தேதிகளில் 1000 மருத்துவ முகாம் தொடங்கி வைத்தோம். தற்போது மருத்துவ முகாம்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எங்கேயும் நிறுத்தப்படவில்லை. வடகிழக்கு பருவமழை பொறுத்தவரை, தமிழ்நாடு முழுக்கவே அனைத்து இடத்திலும், மழை பொழிவு இருப்பதால் இதுவரை நடத்தப்பட்டிருக்கும் ஒட்டுமொத்த மருத்துவ முகாம்கள் 49,326. இதில் பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை 26,80,086 , இதில் காய்ச்சல் பாதிப்பு 14,665 , இருமல் சளி பாதிப்பு 91,556, இந்த வகையில் தொடர்ச்சியாக மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டிருக்கிறது. இப்போதும் கூட டெல்டா பகுதிகளில் மழை வருகிறது என்றால் உடனே மழை ஒரு பக்கம் இருந்தாலும், மருத்துவ முகாம் நடத்துவது தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இச்செய்தியாளர் சந்திப்பில் தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.அரவிந்த், இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.ராஜமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu